# நீ விளையாடுவாய் தானே நான் பொம்மையாகின்றேன்

நெடுந்தீவு முகிலன்





# நீ விளையாடுவாய் தானே நான் பொம்மையாகின்றேன்

நெடுந்தீவு முகிலன்

கற்பகம் புத்தகாலயம்

நீ விளையாடுவாய் தானே
நான் பொம்மையாகின்றேன்
நெடுந்தீவு முகிலன்
0094 778039430
mukilantamilprint10@gmail.com

■

| | |
|---|---|
| முதல் பதிப்பு | : செப்டம்பர் 2012 |
| பக்கங்கள் | : 88 |
| இந்திய விலை | : ரூ.40 |
| இலங்கை விலை | : ரூ.200 |

■

வெளியீடு
கற்பகம் புத்தகாலயம்
(நடேசன் பூங்கா அருகில்)
தி.நகர், சென்னை - 600 017
தொடர்புக்கு 044 24314347
E -mail : info@karpagamputhakalayam.com
Website : www.karpagamputhakalayam.com

■

நூலழகு
மௌஸ்பாய்ண்ட்
சென்னை-5

■

அச்சாக்கம்
சுப்ரா பிரிண்டெக்
சென்னை-5
தொடர்புக்கு 044 28591381

இது
யாருக்குமேயில்லை
காதலர்களைத் தவிர...



# தாய்மை வாழ்த்து

தென்னிந்தியப் பாடலாசிரியர் **பாவலர் அறிவுமதி**

காலஇடிபாடுகளுக்கு நடுவிலும்
காதல் செடிகள் முளைத்து
மொட்டுக்கள்
பூக்கத்தான் செய்கின்றன.

உயிர் சங்கிலிகளுக்கான
நீடிப்பின்
இயல்புகள்
எல்லா அழுத்தங்களை மீறியும்
இயங்குகின்ற
இயக்க விதிகளின்
முகங்களை
மரணங்களை மீறியும்
சந்திக்கத்தாம்
வேண்டியிருக்கின்றன.

நெடுந்தீவு முகிலனின்
காதல்
கவிதைகளையும்
அவ்விதமே
சந்திக்கின்றேன்



குறும்புகள் கலந்த குழந்தைமைச்
சிலிர்ப்புகளாய்
தம்பி முகிலனின்
குறுங் கவிதைகள்
முறுவலூட்டுகின்றன.

குளிர்களி சாப்பிட்டுவிட்டு
இருவரும்
சென்று விட்டோம்
குவளைகள் இரண்டுமோ
சோடிகளாய்
கிடந்தன
ௐ

உன்னை பற்றியே
எழுதினேன்
வாசகர்களாகி விட்டார்கள்
கவிஞர்கள்
ௐ

உன்னை நனைத்து நனைத்து
கள்ளமாய்
மழைதான்
குளித்து விடுகிறது.
ௐ

கல்லூரி முதல்வருக்கு
ஒரு வேண்டுகோள்
அவளை இரசிக்க
எனக்கு ஒரு
பாடவேளை தேவை
☙

கணவாய் கூந்தலால்
இரை
பிடிக்கிறது
நீ கூந்தலால்
என்னை
பிடிக்கிறாய்.
☙

இப்படி இப்படி
இயல்பின் அழகுகளில்
காதல் கவிதைகள்
செய்யும்
தம்பி முகிலனின்
தமிழாற்றல்
முற்றி விளைந்து
முதன்மை
பெறுகிறது



முகிலனின் முயற்சியாலே
விளைந்து செழிக்க
தாய்மையில்
வாழ்த்தும்

அண்ணன்
அறிவுமதி

12.09.2012

# குழந்தை விளையாட்டு...

பொதுவாக பொம்மைகளை குழந்தைகள்
விளையாடுவார்கள் காதலர்களும்
ஒரு வகையில் குழந்தைகளே ஆதலினாலோ
பொம்மைகளை காதலர்களும்
விளையாடுகிறார்கள்.

குழந்தைகளின் பொம்மை விளையாட்டுக்கும்
காதலர்களின் பொம்மை விளையாட்டுக்கும்
வித்தியாசங்கள் இருக்கின்றன..

குழந்தைகள் பொம்மைகளை விளையாடும் போது
விளையாட்டாகவே விளையாடுகிறார்கள்.
காதலர்கள் பொம்மைகளை விளையாடும் போது
பொம்மைகளை காதலர்களாக்கி
விளையாடுகிறார்கள்.



காதலனிடமோ அல்லது காதலியிடமோ
சொல்ல முடியாத காதலை காதலர்கள்
பொம்மைகளுக்கு சொல்லி விளையாடுகிறார்கள்
குழந்தைகள் அப்படி அல்ல
யாரிடமும் எதையும் சொல்லி விளையாடுவார்கள்

மொழிதெரியாவிட்டாலும் குழந்தைகளின்
விளையாட்டுகளில் புரிதல் இருக்கும்
மொழி தெரிந்தும் காதலர்களின்
விளையாட்டுகள் புரியாமல் இருக்கும்

தயக்கங்களுக்கான ஒத்திகைக்காகவேதானே
காதலர்கள் பொம்மைகளோடு விளையாடுகிறார்கள்
தயக்கங்களை தாண்டியும் குழந்தைகள்
பொம்மைகளை விளையாடுகிறார்கள்

பொம்மைகளோடான விளையாட்டு
காதலர்களோடும் குழந்தைகளோடும்
முடிந்து விடுவதில்லை

பொம்மைகளோடு விளையாடி வென்ற
காதலர்கள் - பின்பு தமது
குழந்தைகளோடு விளையாடுகிறார்கள்.
அவர்களின் குழந்தைகள் திரும்பவும்
பொம்மைகளோடு விளையாடுகிறார்கள்.



அன்புடன்


நெடுந்தீவு முகிலன்



உலகிலே ஒருவரைப் போல
ஏழு பேர் இருப்பார்களாம்
அழகிலோ நீ
ஏழு பேர் மாதிரி

ஃ

நீ
முடித்திருக்கக்கூடிய
முதல் டிகிரி
வெட்கப்படுவதே






எனது கண்களைத் தருகிறேன்
குளியல் அறைக்குள் வை.
தண்ணீருக்குத் தட்டுப்பாடு
வரும் காலங்களில்
என் கண்கள் அழுது உனக்கு உதவும்.

சின்ன வயதில் அம்மா
நிலா காட்டி சோறு ஊட்டினாள்
இப்போது நிலாவே எனக்கு
பிரியாணி ஊட்டுகிறது.,

ஃ






பெரும்பாலான நாட்கள்
காலை உணவு
நூடில்ஸ் உடன் போகிறது
உன் கூந்தல் ஞாபகத்தில்

ஃ

மொட்டை மாடியில் நீ
சேலை காயவைக்கிறாய்.
காற்றுக்குச் சேலை அசைகிறது.
அதுவே எனது தேசிய கொடி

ஓ





பிட்டுக்காகவே சிவன்
மண் சுமந்தான்.
உன் காதலுக்காகவே
மண் என்னைச் சுமந்து வைத்திருக்கிறது.

உன்னோடு கை கோத்து நடக்கையில்
முடிவுறும் சாலைகளை
திட்டிக்கொண்டே விலகுகிறேன்.





சத்தியாக் கிரகக்காரர்களுக்கு
மத்தியில் செல்லாதே
அவர்கள் விரதம்
கலைந்ததாகிவிடும்.

ஜ

ஒரு புது
குட்டி உலகம்
உனது முகம்





ஒரே காம்பில்
ஐந்து மொட்டுகள்.
உனது கால் விரல்கள்

ஐ

இதோ நான்
பொம்மையாகின்றேன்
நீ விளையாடுவாய்தானே





அச்சத்தில் தலையை உள்ளிழுக்கும்
ஆமைக் குட்டியைப்போல
என்னைப் பார்த்ததும்
வெட்கப்படுகிறாயே

ஞ

தேனீக்களுக்கு
ஓர் அவசர அழைப்பு
இதோ அவள் கூந்தல் உலர்த்துகிறாள்.
ஈரம் காயும் முன்னர்
உறிஞ்சி விடுங்கள்.





கடவுளே எனது எல்லா
பிறவிகளையும் இப்போதே கொடு.
அவளை ரசிக்க
என் ஒருவனால்
போதாமல் இருக்கிறது..

ஜ

ஐஸ்கிரீம் சாப்பிட்டு விட்டு
இருவரும் சென்றுவிட்டோம்.
கப்புகள் இரண்டுமோ
சோடியாகக் கிடந்தன.






பூக்கடையில் உன்னை
பார்த்து விட்டுத் திரும்பினேன்.
பழக்கடையிலும்
நீ இருந்தாய்.

ஜ

நீ கட்டிய சேலைகளைத் தா.
சலவை செய்வதற்கு
என்னிடம் நிறைய
கண்ணீர் இருக்கிறது.





கூந்தலால் உனது முகம்
முழுவதையும் மூடுவதையே
நான் அமாவாசை
என்கிறேன்.

உடலிலே வளர்ச்சியடையாதது
கண்களாயிருந்தாலும்
எனது காதல் வளர்ச்சியடைந்தது.
உனது கண்களாலே.

ஜ





நீ எனக்காக
ஒரு பொய் சொல்
என்னைக் காதலிக்கவில்லை என்று

உன்னைப் பற்றியே எழுதினேன்
வாசகர்களாகி விட்டார்கள்.
கவிஞர்கள்.





உன் மடியில் தலை
வைத்துத் தூங்கிக்கொண்டிருந்தேன்.
நிலா தெரிந்தது.
அன்று அமாவாசையும்கூட

எனது தேவதை
ஊர்வலம் வரப்போகிறாள்
சாமரம் வீசுவதற்கு
தயாராகுங்கள் அழகிகளே






பிரதான வீதியை
நீ மிகச் சாதாரணமாய் கடக்கிறாய்.
நானோ ஊரில் உள்ள
அத்தனை சாமிகளையும்
பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன்.

ஜ

கடன் அன்பை முறிக்கும் என்று
கடைத்தெருவில் படித்தேன்.
உன்னிடம் நான் கேட்பது
கடனாய் அன்பை.





நிலத்தில் கதிரை இருக்கிறது
கதிரையில் நான் இருக்கிறேன்
என்னில் நீ இருக்கிறாய்
உட்காராமலே இருக்கின்றன
உனது வெட்கங்கள்.

என் தோளில்
ஒரு முறை சாய்ந்தாய்
எவ்வளவு இதமாக இருந்தது

எப்படி இருக்குமோ நீ
நிரந்தரமாகவே தூங்கி எழும்
மரக்கட்டிலுக்கு





கடற்கரை ஓரத்தில் உன்னோடு
கை கோத்து நின்ற பொழுது
இரண்டு மீன்கள்
இறந்து கிடந்தன

ஒரு வேளை
சாதிப் பிரச்சனையால்
தற்கொலை செய்து கொண்டனவோ

ஃ

உயிரோடே
புதைக்கப்பட்டேன்
உன் கன்னக்குழியில்

ஜி






மதிய உணவுக்காய் உன்
வீட்டுக்கு வந்திருந்தேன்.
உனது கைப்பட சமைத்த
உணவு என்று முழுவதையும்
உண்பதற்குத் தயாரானேன்.
நீயோ என் எச்சில் விரல்பட்ட
உணவு என்று மீதியை
உண்பதற்குத் தயாரானாய்.

ஜ

பட்டாம் பூச்சிகளைத்
துரத்திக்கொண்டிருந்தேன்

பட்டாம் பூச்சிகளோ
உன்னைத்
துரத்திக்கொண்டிருந்தன.

ஃ





உன் கூந்தலை இருட்டாலும்
உன் முகத்தை வெளிச்சத்தாலும்
வடிவமைத்த பிரம்மனுக்கு
என் மனமார்ந்த
நன்றிகள்.

ம

உன்னை நனைத்து நனைத்து
கள்ளமாய் மழைதான்
குளித்து விடுகிறது.






நீ இருக்க எதற்காக
வெளிநாடுகளில் இருந்து
இறக்குமதி செய்யப்படுகிறது
ஆப்பிள்

ஃ

கணவாய் கூந்தலால்
இரை பிடிக்கிறது.
நீ கூந்தலால்
என்னைப் பிடிக்கிறாய்.

ஃ






நான்கு வாரங்களுக்கு ஒரு முறை
கடவுளிடம் மன்றாடுகின்றேன்
உனக்கு வயிறு
வலிக்கக் கூடாது என்று

ஃ

உன்னை
நிலா போல் என்றால்
பூக்கள் கோவிக்குமோ

ழ






உன்னை விட நான்
கொஞ்சம் உயரம்

எல்லோரையும்விட
அழகில் நீதான்
நிறைய உயரம்

ஃ

நீ குளிக்கப் போனாலே
குழப்பம்தான்
அழகு
கழுவப்பட்டு விடுமோ என்று





பூப் போட்ட
உன் ஜாக்கெட்டில்
தேன் கூடு கட்டுகின்றன
என் கண்கள்

ஔ

வருடத்துக்கு ஒரு முறை
நடைபெறும் அழகிகள் தெரிவும்
உன்னால் நூற்றாண்டுக்கு
ஒரு முறை ஆகப்போகிறது.





கல்லூரி முதல்வருக்கு
ஒரு வேண்டுகோள்
அவளை ரசிக்க
எனக்கு ஒரு
பாட வேளை தேவை.

தேவதை ஒருத்தியைச் சந்திப்பதாக
கனாக் கண்டேன் - அழகிகளே
அவசரப்பட்டு யாரும்
என்னிடம் ஓடிவராதீர்கள்





உன் சேலை ஒரு முறை
எனக்குப் போர்வையாக இருந்தபோது
எவ்வளவு சுகமாக இருந்தது.
இப்போது நீயே
எனக்காக இருக்கிறபோது
எப்படி இருக்குமோ

ஃ

என் தோள்களில்
சாய்ந்து செல்கிறாய்
சலவை செய்யப்படாமல்
சட்டைகள்தான் நிறைகின்றன.






திடீரென மின்சாரம் தடைப்பட
அப்பா திட்டினார் மின்சார சபையை..
அம்மா ஓடினாள் பக்கத்துக் கடைக்கு
மண்ணெண்ணெய் வாங்க.
நான் யோசித்தேன் - இப்போது
உன்னை அழைத்து
வரலாம் என

ஓ

உன் சுடிதார் நிறங்களில்
மீன் குஞ்சுகள் வளர்க்கிறேன்.
அவற்றைத் தொடப்போனால்
மட்டும் உன்னைப் போல
ஓடிவிடுகின்றன.

ஃ





மதுபானச்சாலைகள் மூடப்பட்ட
விடுமுறை நாட்களில்
நீ வெளியே செல்லாதே

உன்னைப் பார்த்தே
பருகிவிடுவார்கள்.

குழந்தைகளைப் பார்த்ததும்
தூக்கிக் கொஞ்சுகிறாய்.
அப்போது இருபது வயதுகளை
இழந்து விட யோசிக்கிறேன்.






தையல் வகுப்புக்கு
போகையில்
என்னைக் கிழித்துவிடுகிறாய்
திரும்ப வீடு போகையில்
தைத்துவிடுகிறாய்

நன்றாகப்
படிக்கிறாய்போல

ஜ

நீ லிப்ரிக் பூசிக்கொள்ளாதே
உன் சிவந்த உதடுகளை
அவை உறிஞ்சிவிடக்கூடும்.






நீ சுடிதார் அணிந்து வந்தால்
நான் துப்பட்டாவாக
மாற ஆசைப்படுகிறேன்
அதுதானே உன்னை
இறுகக் கட்டிப்பிடித்திருக்கிறது.

ஒரு மழை நாளில்
இருவரும் குடை பிடித்து
நடந்து கொண்டிருந்தோம்.
எப்படி கன்னங்கள்
நனைந்திருக்கக்கூடும்.

ஃ







உன்னை எட்டாவது அதிசயம்
என்பது எப்படி
அதிசயங்கள் எல்லாமுமே
உன்னைப் பார்த்து
அதிசயப்படுகையில்

ஃ

கடவுள்களைச் செதுக்கும்
கற்களில் உலோகங்களில்
உன்னைச் செதுக்கவும் பிடிக்கவில்லை
நீ மென்மையானவள்

ஜ





நீர் காற்று விலங்கு
வெடித்துச் சிதறி வித்துகள்
இடம்பெயர்ந்து
விருட்சங்கள் ஆகின்றன

நீ உனது பார்வைகளால்
பரவல் அடைந்து
நந்தவனமாகிறாய்.

ஜ

உன்னிடம்
வரதட்சணையாய்
நான் காதலையே
கேட்கிறேன்.





உன்னை வரைந்து வைத்திருந்தேன்
பட்டாம் பூச்சிகள்
பறந்து கொண்டிருந்தன

உன்னை எழுதி வைத்திருந்தேன்
எறும்புகள்
மொய்த்துக்கொண்டிருந்தன.

ஐ

கனவில் நீ
வந்து போனால்
காலையில் தலையணை
அருகில் தேடுகிறேன்
தவறி விழுந்திருக்குமென
உன் கொலுசுகளை





வளையல் கடைக்காரனைத்
திட்டினேன் - அழகான
உன் கைகளுக்குப் பொருத்தமான
வளையல்களை வீதியில்
வெயிலில் போட்டு
விற்கிறான்.

கடைசியாய் உன்னைக்
கறுப்புத் தாவணியில்
பார்த்ததாலே பிடிக்கிறது
எனக்கு இரவையும்

ஓ






உன் வீட்டில் பூனை
குட்டி போட்டால்
அதில் ஒன்றாகவாவது
நான் மாறிவிடவா
உன் விரல் பட்ட
எச்சில் உணவுகளை
உண்பதற்குத்தான்.

ஓ

காலையில் செடிகளுக்குத்
தண்ணீர் விடுகிறாய்

பூக்கள்
உனது முகத்தில்
விழிக்கின்றன.





இரவானதும் கூடு
செல்லும் பறவைகளாக
இமை மூடியதும்
உன் கனவுகள்
பறந்து வருகின்றன.

ஐ

புகைப்பிடிப்பதை
நிறுத்தி விட்டேன்
நீ இருமிக்கொள்வதால்





அலைகளுக்கு உன்
பெயரை வைத்து
பார்ப்பதாலா
கரைகள் அரிக்கப்படுகின்றன.

யாராவது காதல் தோல்வியா
என்று கேட்டால் - நிச்சயமாய்
ஆம் என்றுதான் சொல்லுவேன்
உன்னைச் சந்தித்து
ஒரு வாரமாகி விட்டதே





மலை உச்சியில்
நின்று பார்க்கிறேன்
எல்லாம் சின்னதாகத் தெரிகின்றன
உன் நினைவுகளைத் தவிர

ஷ

பூக்கடைக்காரியை
திட்டவேண்டும்போல இருக்கிறது.
ஏமாற்றிப் பூவை
பூவிடமே விற்கிறாளே

ஐ






நீ கனவில்
வருவதால் உனக்கும்
சேர்த்து கொடுத்துக் கொண்டிருக்கிறேன்
வீட்டு வாடகை..

ஒரு முறை என்
தோட்டத்திற்கு வா
பூக்கள் உன்னை
பராமரிக்கும்





வானத்தில் இருந்து
நிலா கீழே விழுந்து விட்டதோ
நீ பூமியில்
உலவுகிறாய்.

பயணம் போகும்போது
பேருந்தில் சந்தித்தேன்
உன்னை

இப்போது
உன்னைச் சந்திப்பதற்காகவே
பயணம் போகிறேன்

ழ






கூந்தலுக்குள்
ஒளிந்து ஒளிந்து
கள்ளன் போலீஸ்
விளையாடுகின்றன
உன் காதுமடல்கள்

புதிது புதிதாக
எழுதிக்கொண்டிருக்கிறேன்
உன் பழைய ஞாபகங்களையே
வைத்துக்கொண்டு

ஜ





உன்னை நனைத்த
மழைத்துளிகளைச்
சமுத்திரங்களில்
இருந்து பிரித்தெடுக்க
விரைகிறேன்.

மணல் துகள்களில்
உன்னை வரைகிறேன்
பூமி அழகாகிறது.





இருந்த இடத்திலே
சுற்றுகிறது மின் விசிறி
நானோ நீ
போகும் இடமெல்லாம்
சுற்றுகிறேன்

ஜ

நெடுந்தீவு முகிலனின்
பிற நூல்கள்

---

மனத்திரை மேகங்கள் - 2007
ஃ - 2008
கிறுக்கி - 2008
கனவுகளின் வாசகன் - 2009
அகதியின் முகம் - 2009
சாடிகள் கேட்கும் விருட்சங்கள் - 2010
கடவுளின் சயனத்தைக் கலைக்கும் மணியோசை - 2011
பயணிகள் கவனத்திற்கு - 2011

---

Neduntheevu Mukilan
Ward No. 13, Main Street
Delft, Jaffna
Srilanka

மொட்டை மாடியில்
துணி காய வைக்கிறாய்.
துணி காயும்வரை
என்னையும்
காய வைக்கிறாய்



கற்பகம் புத்தகாலயம்
சென்னை

KR 467